# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2084 - 2018 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2018.08.10

*2084 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 148 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 149 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


147-B81438-353 (2018/08)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## மாரவில மாவட்ட நீதிமன்றம்

பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்

**194/MB ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய மாரவில மாவட்ட நீதிமன்றின் பிஸ்கால் மூலம் செய்யப்படுகின்ற பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்தல்**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட பிடிகல் கோரளை, யடகலன்பத்துவ, இஹல மஹவெவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள 'தன்வல அகார' என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. ஏ. ஏ. விமலசேன அவர்களால் 2006.10.31 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3512 ஆம் இலக்க வரைபடத்தின் 1 ஆம் இலக்க எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணி. பரப்பளவு 00ஏ. 02றூ. 23.00 பே. காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் அடங்களாக இது மாரவில காணிப்பதிவகத்தில் K. 110/149 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை**.- புத்தளம், A 3 பிரதான பாதையின் ஊடாக மஹவெல பன்சலை சந்தி வரை சென்று அந்தச் சந்தியால் (59 ஆம் கிலோ மீற்றர் கல்) இடது பக்கம் திரும்பி பன்சலைப் பாதையில் சுமார் 400 மீற்றர் அளவு சென்றவுடன் T சந்தி அகப்படும். அவ்விடத்தால் இடது பக்கம் திரும்பி சுமார் 250 மீற்றர் அளவு சென்று மீண்டும் இடது பக்கம் திரும்பி அந்தப் பாதையில் யாப்பா ஸ்டோர்ஸ் அமைந்துள்ளது. வலைவின் அருகில் இடது பக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

2018 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு, ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பிரதி பிஸ்கால் மூலம் ஏல விற்பனை செய்யப்படும்.

**பணம் செலுத்தும் முறை**.- ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்தல் வேண்டும்.

(1) வாங்கிய விலையின் (நூற்றுக்கு இருபத்தி ஐந்து) 25%;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக (நூற்றுக்கு ஒன்று) 1%;
(3) பிஸ்கல் கமிஷனாக சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258 ஆம் பிரிவின் கமிஷன் பணம்;
(4) அனைத்து விளம்பரக் கட்டணங்கள் ;
(5) எழுதுவினைஞர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
(6) விற்பனைச் செலவுகள், வேறும் கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம்;
(7) விற்பனை அத்தாட்சிப் பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம்.

குறிப்பிட்ட ஆதன விற்பனை நீதிமன்ற அங்கீகாரத்துடன் நடைபெறுகின்றது.

வாங்கிய விலையின் மிகுதி 75% மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட முழுத் தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும். மீண்டும் ஆதனத்தை ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமைப் பத்திரம் வேறு விபரங்களை பரிசீலிப்பதற்கும் மேலதிக விபரங்களையும் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய பிரதான அலுவலகம், (முதலாம் மாடி), இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி : 037-2253300, 037-2253301 பெக்ஸ் : 037-22552247

பதிவாளர்/பிரதி பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மாரவில.

மாவட்ட நீதிமன்றம்,
மாரவில.

8-452

# நானாவித அறிவித்தல்கள்

## சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 52 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) சிறுவர் அபிவிருத்தி கருதி சுகாதாரம், புனர்வாழ்வு, பராமரிப்பு போன்ற சேவைகளை வழங்குதலும் நோய்வாய்ப்பட்ட மற்றும் ஆற்றலற்ற சிறுவரின் இல்லங்களிலேயே அவர்களைப் பேணுதல் சேவையொன்றை மேற்கொள்ளல்;

(ஆ) சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சுகாதார நிலையங்கள் போன்றவற்றை நிறுவுதலும் சிறுவரின் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தலும்,

பிறவும்.

கவீந்திரன் கோடீஸ்வரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திகாமடுல்லை மாவட்டம்.

8- 363

---

## வாணிப நீதிபரிபாலன அதிகாரத்திற்குட்பட்ட கொழும்பில் நடைபெறும் மேல்மாகாண பகுதிக்கான மேல் நீதிமன்றம்

வழக்கு இல.: HC/சிவில் 44/ 2018 CO
தன்மை : கம்பனிகள்
பெறுமதி ரூபா 214,939,872.70
நடைமுறை: சுருக்கெழுத்து

மாலபை றொபட் குணவர்தன மாவத்தை, இல. 398/8 இல் மட்டுப்படுத்தப்பட்ட தீபிகா மைக்ரோ கிரடிட் (தனியார்) (முன்னர் அறியப்பட்டது. தீபிகா பேக்ஸ் டே கலக்சன்) (தனியார்) கம்பனி சம்பந்தமான காரியத்தில் 2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII பிரிவின் கீழ் நீதிமன்றத்தின் மூலம் கணக்கை தொகுத்து செலுத்தி முடிவிடுவதற்காக கேள்வி மனு சம்பந்தமான ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 100/1 என்னும் விலாசத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை அமைத்துள்ள மட்டுப்படுத்தப்பட்டுள்ள எல் ஓ எல் சீ பெக்டர்ஸ் (லிமிட்டெட்),

தலைமை வியாபார நிலையம்,
இல. 504, நாவல வீதி,
ராஜகிரிய.

முறைப்பாட்டாளர்கள்

மேல் குறிப்பிடப்பட்டுள்ள, கம்பனி வாணிப மேல் நீதிமன்றத்தின், மூலம் கணக்குகள் முடிவு செய்து மூடுவதற்கான மனுவொன்று ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை இல. 100/1 மற்றும் ராஜகிரிய நாவல வீதி, இல. 504 இல் தலைமை அலுவலம் அமைந்துள்ள எல் ஓ எல் சீ பெக்டர்ஸ் (லிமிட்டெட்) மூலம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வாணிப மேல் நீதிமன்றத்தில் மனு செய்திருப்பதாகவும் அந்த மனுவை 2018 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அந்த மனுவுக்கான கட்டளையை இடுவதற்கு சாதகமாகவோ பாதகமாகவோ காரணங்களை முன்வைக்க கரிசனையுள்ள அக்கம்பனியின் கடன் உரியவர்கள் அல்லது ஏற்புடையோர் இருப்பின் அதற்காக தாமாகவோ அல்லது தனது நிதி ஆலோசனை வழங்குவோர் அல்லது நியாயவாதிகள் மூலம் அந்த விசாரணை நடைபெறும் போது தோன்ற முடியும் என்றும் அந்த மனுவின் பிரதியை பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தி அதன் பிரதியை தேவைப்படும் அந்த கம்பனி ஏதும் கடன் உரியவருக்கு அல்லது ஏற்புடையவருக்கு கீழ் கையொப்பம் இடுபவர் மூலம் கொடுக்கப்படும் என இதன் மூலம் அறியத்தருகிறோம்.

பூர்னிமா ஞானசேகர,
இல. 17, 3 ஆம் மாடி, பெல்மன்ட் வீதி, கொழும்பு 12.

**குறிப்பு**.- இந்த மனுவை விசாரணை செய்யும் வேளையில் தெரிபடுவதற்கு விரும்பும் யாரும் வேறு அப்படி செய்ய தான் எண்ணியிருப்பதாக எழுத்து மூல அறிவித்தல் மேல் குறிப்பிடப்பட்டுள்ள பூர்னிமா ஞானசேகரவிடம் ஒப்படைக்க அல்லது வியாபார நிறுவனமாகின் அந்த வியாபார நிறுவனத்தின் பெயர் விலாசம் குறித்து அவர் மூலம் அல்லது அவர்களின் நியாயவாதி இருந்தால் அவர் மூலம் கையொப்பமிட்டு மேல் குறிப்பிட்டுள்ளவருக்கு வருடம் 2018, ஒற்றோபர் மாதம் 3 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்க கூடியதாக கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். இல்லாவிடில் அப்படி தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

பூர்னிமா ஞானசேகர,
இல. 17, 3 ஆம் மாடி,
பெல்மன்ட் வீதி,
கொழும்பு 12.

8-385

---